**இலங்கை தேசிய ஒலிம்பிக் குழு - 2023**

---

**1. நிதிக் கூற்றுக்கள்**

**1.1 அபிப்பிராயம்**

இலங்கை தேசிய ஒலிம்பிக் குழுவின் (“என்ஓசீஎஸ்எல்”) 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, நிதிகள் மற்றும் ஒதுக்கங்களில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இலங்கை தேசிய ஒலிம்பிக் குழுவின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் சிறிய மற்றும் நடுத்தரளவு நிறுவனங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு (எஸ்எம்ஈஎஸ் இற்கான எஸ்எல்எவ்ஆர்எஸ்) இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை சிறிய மற்றும் நடுத்தரளவு நிறுவனங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு (எஸ்எம்ஈஎஸ் இற்கான எஸ்எல்எவ்ஆர்எஸ்) இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, என்ஓசீஎஸ்எல் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது என்ஓசீஎஸ்எல் இனை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் என்ஓசீஎஸ்எல் இன் செயற்பாடுகளினை இடைநிறுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

என்ஓசீஎஸ்எல இன் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் என்ஓசீஎஸ்எல் இன் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு என்ஓசீஎஸ்எல் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி என்ஓசீஎஸ்எல் இன் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு என்ஓசீஎஸ்எல் இற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய

பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் என்ஓசீஎஸ்எல் இன் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- என்ஓசீஎஸ்எல் இன் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- என்ஓசீஎஸ்எல் இன் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் என்ஓசீஎஸ்எல் இணங்கியிருந்ததா என்பதும்,

- என்ஓசீஎஸ்எல் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- என்ஓசீஎஸ்எல் இன் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமைகள்

| சட்டங்கள்/ பணிப்புரைகளுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 1973 இன் 25 ஆம் இலக்க விளையாட்டுக்கள் சட்டத்தின் 41 ஆம் பிரிவின் கீழ் விளையாட்டுத்துறை அமைச்சரால் உருவாக்கப்பட்ட 1993 யூன் 29 ஆம் | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | திகதிய 773/7 ஆம் இலக்க பிரமாணம் | | | |
| (i) | 2(அ) பிரிவு | வெளிநாட்டு நிகழ்ச்சிகளில் பிரதிநிதிகள் பங்குபற்றுவதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 7,587,673 தொகை செலவிடப்பட்டுள்ளது. எனினும், வெளிநாட்டு கூட்டமைப்புக்கள், குழுக்கள், மாநாடுகள் மற்றும் ஏனைய கூட்டங்களில் கலந்துரையாடப்பட்ட விடயங்கள் தொடர்பில் பிரதிநிதிகளிடமிருந்து அறிக்கைகளை, அவர்கள் இலங்கைக்கு திரும்பி 30 நாட்களுக்குள் பெற்றுக்கொள்வதற்கு என்ஓசீஎஸ்எல் தேவையான நடவடிக்கைகளை எடுக்கவில்லை. | எதிரகாலத்தில், இலங்கையில் விளையாட்டு நடவடிக்கைகளின் எதிர்கால அபிவிருத்தி குறித்து விளையாட்டு அமைச்சிடம் சிறந்த உரையாடல்களை தொடர்ச்சியாக நாங்கள் மேற்கொள்வோம். | சட்டங்கள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றை கடைப்பிடிக்காத பொறுப்புவாய்ந்த அதிகாரிகளுக்கு எதிராக உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | 8 (அ) மற்றும் (ஆ) பிரிவு | உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வளமூலங்களிலிருந்து மீளாய்வாண்டின் போது என்ஓசீஎஸ்எல் இனால் மொத்த வருமானமாக ரூபா 264,363,370 இனங்காணப்பட்ட போதிலும், என்ஓசீஎஸ்எல் இனால் நிறைவேற்றப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான காலாண்டு செயன்முன்னேற்ற அறிக்கைகள் விளையாட்டு விடயத்துடன் தொடர்புடைய அமைச்சருக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | நல்லாட்சி நோக்கத்திற்காக, முன்னோக்கிச் செல்வதில் தகவல்களை பகிர்ந்து கொள்ள என்ஓசீஎஸ்எல் மகிழ்ச்சி அடைகிறது. | சட்டங்கள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றை கடைப்பிடிக்காத பொறுப்புவாய்ந்த அதிகாரிகளுக்கு எதிராக உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**1.6.1 பெறவேண்டியவைகள்**

| **கணக்காய்வு விடயம்** | **முகாமைத்துவ கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| இலங்கை சைக்கிளோட்ட சம்மேளனம் மற்றும் இலங்கை அடிபந்து / மென்பந்து சம்மேளனங்களிடமிருந்து பெறவேண்டிய | அடுத்த ஆண்டுக்குரிய மானியத்தினை விடுவிக்கும் முன்னர் | தாமதமின்றி நிலுவை மீதிகளை அறவீடு செய்வதற்கு |

| | | |
|---|---|---|
| முறையே ரூபா 271,800 மற்றும் 720,047 தொகைகள் 03 ஆண்டுகளுக்கு மேலாகவும் வசூலிக்கப்படாமல் நிலுவையில் இருந்தன. | தொடர்புடைய ஆவணங்களை சேகரிக்க என்ஓசீஎஸ்எல் தேவையான நடவடிக்கை எடுக்கும். | நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவு**

மீளாய்வாண்டுக்கான செயற்பாட்டு விளைவு ரூபா 8,464,684 மிகையாக காணப்பட்டதுடன் அதற்கு நேரோத்த முன்னைய ஆண்டின் மிகையாக ரூபா 59,349,294 காணப்பட்டது. ஆகையினால், நிதி விளைவுகளில் ரூபா 50,884,610 தொகையான வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது ரூபா 63,656,868 தொகையினால் செயற்திட்ட வருமானம் குறைவடைந்தமை இந்த வீழ்ச்சிக்கு பிரதான காரணமாக இருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயற்பாட்டு வினைத்திறனின்மைகள்**

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | என்ஓசீஎஸ்எல் இன் உடற்பயிற்சிக்கூடம் முதல் ஆண்டுக்கு ரூபா 4,851,000 வருடாந்த குத்தகை வாடகையுடன் 2021 யூலை 01 முதல் 2026 யூன் 30 வரை வெளியாள் தரப்பினர் ஒருவருக்கு குத்தகைக்கு விடப்பட்டது. அதன்படி, குத்தகைதாரர் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 2,699,256 நிலுவை மீதியினை செலுத்தாது உடற்பயிற்சிக்கூடத்தை காலி செய்துள்ளார். எனினும், இந்த தீர்ப்பனவு செயன்முறைக்கு ரூபா 35,000 ஏற்பட்ட பின்னரும் கூட இந்த அறிக்கை திகதி வரை நிலுவை மீதிகள் தீர்ப்பனவு செய்து முடிக்கப்படவில்லை. | தரப்பினர்களிடமிருந்து நிலுவைத் மீதிகளினை அறவீடு செய்வதற்கு என்ஓசீஎஸ்எல் பொருத்தமான நடவடிக்கையினை எடுக்கும். | நிலுவைத் மீதிகளினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | என்ஓசீஎஸ்எல் இன் உணவகத்தினை தனியார் கம்பனி ஒன்றுக்கு இரண்டு வருட காலப்பகுதிற்காக குத்தகைக்கு விடுவதற்கு 2022 மார்ச் 01 இல் குத்தகை உடன்படிக்கை ஒன்றினை என்ஓசீஎஸ்எல் கைச்சாத்திட்டது, மற்றும் உடன்படிக்கை நடைமுறைக்கு வரும் திகதி 2022 நவம்பர் 01 ஆகும். 2023 திசெம்பர் 31 இல் உள்ளபடியாக ஆண்டு குத்தகை வாடகையான மொத்தம் ரூபா 9,000,000 தொகையில், ரூபா | நிலுவை மீதிகளை அறவீடு செய்து, உடன்படிக்கையினை புதுப்பிக்கும் செயற்பாட்டில் என்ஓசீஎஸ்எல் உள்ளது. | நிலுவைத் மீதிகளினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 3,801,979 தொகை அறவீடு செய்யப்படாமல் உள்ளது. மேலும், குத்தகைதாரரிடமிருந்து இந்த நோக்கத்திற்காக 2023 ஜனவரி 30 இல் ரூபா 683,000 பெறப்பட்ட பின்னரும் கூட உணவகத்தின் மதுபானசாலை அனுமதிப்பத்திரத்தினை என்ஓசீஎஸ்எல் புதுப்பிக்க தவறிவிட்டது. | | |
| (இ) | மீளாய்வாண்டின் போது தடகள விளையாட்டு வீரர்கள், அதிகாரிகள் மற்றும் பயிற்சியாளர்களுக்கு பரிசுகள் மற்றும் நன்கொடைகள் வழங்கியமைக்காக ரூபா 1,602,000 தொகையினை, இந்த நோக்கத்திற்கென அங்கீகரிக்கப்பட்ட திட்டமொன்று இல்லாமல் என்ஓசீஎஸ்எல் செலுத்தியுள்ளது. | நன்கொடைகளை எவ்வாறு வழங்குவது குறித்து இலங்கை தேசிய ஒலிம்பிக் குழுவிடம் முறையான வழிகாட்டுதல் இல்லை. என்ஓசீஎஸ்எல் அத்தகைய வழிகாட்டுதலை விருத்தி செய்ய விரும்புகிறது. | பரிசுகள் மற்றும் நன்கொடைகள் என்பவற்றை வழங்குவதற்கு முறையான திட்டமொன்றினை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2024 இல் பாரிஸ் ஒலிம்பிக்கிற்காக புலமைப்பரிசில்களை வழங்குவதற்கு 08 தடகள விளையாட்டு வீரர்களை என்ஓசீஎஸ்எல் தெரிவு செய்திருந்ததுடன், 2024 ஒலிம்பிக் விளையாட்டுக்கு தகுதி பெறுவதற்கான தயார்படுத்தலுக்கு 2022 முதல் 2024 வரையான காலப்பகுதியின் போது மொத்தம் ரூபா 53,009,144 தொகையான புலமைப்பரிசில்களை அவர்களுக்கு வழங்கியிருந்தது. எனினும், தெரிவுசெய்யப்பட்ட புலமைப்பரிசில்களை பெற்ற எவரும் 2024 ஒலிம்பிக் போட்டிகளுக்கு தகுதி பெறமுடியாதவர்களாக இருந்த அதேவேளை, ஒலிம்பிக்கில் இலங்கையை பிரநிதிப்படுத்திய 06 தடகள விளையாட்டு வீரர்கள் புலமைப்பரிசில் பெற்றவர்களுள் காணப்படவில்லை. அதன்படி, விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்தினால் அறிவுறுத்தப்பட்டதன்படி | கருத்துரை பெறப்படவில்லை. | என்ஓசீஎஸ்எல் ஆனது தடகள வியைாட்டு வீரர்களை தெரிவு செய்யும் போது விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்தின் அறிவுறுத்தல்களை பின்பற்றுவதோடு, திறமையான தடகள விளையாட்டு வீரர்களை தெரிவு செய்வதற்கு முறையான நுட்பமொன்று அறிமுகப்படுத்தவும் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | முன்னுரிமை அடிப்படையில் விளையாட்டு வீரர்களை தெரிவு செய்யாமையினாலும், திறமையான விளையாட்டு வீரர்களை தெரிவு செய்து அவர்களை தொடர்ந்து கண்காணிப்பதற்கான முறையானதொரு நுட்பத்தை அறிமுகப்படுத்த தவறியதாலும், என்ஓசீஎஸ்எல் புலமைப்பரிசில் நிகழ்ச்சித்திட்டத்தின் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை அடைய முடியவில்லை என அவதானிக்கப்பட்டது. | | |
| (ஆ) | 2023 ஆசிய விளையாட்டுப் போட்டிக்கு தயாராகும் நோக்குடன் தடகள விளையாட்டு வீரர் ஒருவருக்கு வெளிநாட்டு பயிற்சியை அளிக்க என்ஓசீஎஸ்எல் இற்கு மொத்தம் ரூபா 15,450,579 ஏற்பட்டது. எனினும், இந்த பயிற்சியை அளிப்பதற்கு மீளாய்வாண்டின் போது நிறைவேற்றுக் குழு, தேசிய தடகள விளையாட்டு சம்மேளனம் மற்றும் விளையாட்டு அபிவிருத்தி திணைக்களம் மற்றும் உரிய அமைச்சர் ஆகியற்றின் அங்கீகாரம் பெறப்படவில்லை. மேலும், நலிவடைந்த செயல்திறன் காரணமாக இந்த தடகள விளையாட்டு வீரர் ஆசிய விளையாட்டுப் போட்டிக்கு தெரிவு செய்யப்படவில்லை. | இந்த முடிவு எங்களின் நிறைவேற்று சபையினால் கூட்டாக எடுக்கப்பட்டது. | விளையாட்டு வீரர்களுக்கு பயிற்சியை அளிப்பதற்கு உரிய அதிகாரிகளின் அங்கீகாரத்தினை என்ஓசீஎஸ்எல் பெற வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் போது சம்பந்தப்பட்ட 18 தேசிய விளையாட்டு மன்றங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட வருடாந்த உறுப்பினர் மானியங்கள் மொத்தம் ரூபா 5,400,000 தொகையினையும் மற்றும் ஏனைய செயற்திட்டம் தொடர்பான கொடுப்பனவாக மொத்தம் ரூபா 5,266,980 தொகையினையும் விடுவிக்க என்ஓசீஎஸ்எல் நடவடிக்கை எடுக்கவில்லை. | விளையாட்டு சம்மேளனங்களுக்கு நிதி ஒதுக்கீட்டு செயன்முறையினை விரைவுபடுத்துவதற்கான சாத்தியமான முறைகளை என்ஓசீஎஸ்எல் ஆராயும். | சம்மந்தப்பட்ட தேசிய விளையாட்டு மன்றங்களுக்கு ஒதுக்கீடுகளினை விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | என்ஓசீஎஸ்எல் இன் நிறைவேற்று சபையின் குறிப்பிடத்தக்க உறுப்பினர்கள் தொடர்புகொண்ட குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்ய முன்னாள் இளைஞர் விவகாரங்கள் மற்றும் | இது தொடர்பாக 2024 ஏப்ரல் 18 அன்று விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்தின் பொது பணிப்பாளருக்கு பதில் கடிதத்தினை என்ஓசீஎஸ்எல் இன் பொதுச் செயலாளர் | மூன்று உறுப்பினர்களைக் கொண்ட குழுவினால் வழங்கப்பட்ட பரிந்துரைகளை அமுல்படுத்த |

| | | | |
|---|---|---|---|
| | விளையாட்டு அமைச்சரால் 2023 திசெம்பர் 21 இல் நியமிக்கப்பட்ட மூன்று உறுப்பினர்களைக் கொண்ட குழுவினால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் இதுவரை அமுல்படுத்தப்படவில்லை. மேலும், 2024 செப்தெம்பர் 04 ஆம் திகதிய அதன் நெறிமுறைக் குழு அறிக்கை மூலம் பரிந்துரை செய்யப்பட்டதன் பிரகாரம், என்ஓசீஎஸ்எல் இன் பொதுச் செயலாளருக்கு எதிராக பயனுள்ள நடவடிக்கைகளை எடுப்பதற்கு என்ஓசீஎஸ்எல் தவறிவிட்டது. | அனுப்பியுள்ளார். | பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | சர்வதேச ஒலிம்பிக் குழு (ஐஓசீ) 2024 திசெம்பர் 10 முதல் அமுலுக்கு வரும் வரையில் என்ஓசீஎஸ்எல் இற்கு எதிராக நிதி இடைநிறுத்தத்தை விதித்திருந்தது, மற்றும் தற்போது காணப்படும் உள்ளக ஆட்சி சிக்கல்கள், நெறிமுறை சிக்கல்கள் மற்றும் நிறைவேற்றுக் குழு உறுப்பினர்களுக்கிடையே ஒற்றுமையின்மை காரணமாக கிட்டிய எதிர்காலத்தில் என்ஓசீஎஸ்எல் மீதான சர்வதேச ஒலிம்பிக் குழுவின் உறுப்புரிமையை இடைநிறுத்துவதற்கான சாத்தியப்பாடு காணப்படுகிறது. இந்த நிலைமை என்ஓசீஎஸ்எல் இன் நம்பகத்தன்மை மற்றும் நன்மதிப்பு என்பவற்றை மோசமாக சேதப்படுத்துவதுடன், நாட்டின் விளையாட்டுக்களின் வீழ்ச்சிக்கும் காரணமாக அமைந்துள்ளது. | பொதுச் செயலாளரை இடைநிறுத்துவதற்கு பரிந்துரைக்கப்பட்ட நடவடிக்கையினை என்ஓசீஎஸ்எல் எடுத்துள்ளது. தடகள விளையாட்டு வீரர்களின் விளையாட்டுக்கள் மற்றும் தொழில்கள் என்பவற்றின் விருத்தியினை ஆதரிக்கும் நோக்கில் இலங்கைக்கான நிதியிடலை மீட்டெடுப்பதற்கு உடனடியாகவும், நம்பிக்கையுடனும் இந்த விடயத்தை எடுத்துரைத்து வருகின்றோம். | குற்றச்சாட்டுக்களுடன் ஈடுபட்டுள்ள அதிகாரிகளுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

**3.3 சர்ச்சைத் தன்மையான கொடுக்கல் வாங்கல்கள்**

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பளுதூக்கும் சம்மேளனத்தின் சம்மதத்தினை பெற்றுக்கொள்ளாமல், வெளிநாட்டு விளையாட்டுக் கல்வி நிகழ்ச்சித்திட்டத்தினை பூர்த்தி செய்யும் நோக்கில், ஒய்வுபெற்ற பளு தூக்கும் வீரர் ஒருவருக்கு 2023 ஒக்தோபர் 19 அன்று ரூபா 464,750 | வழங்கப்பட்ட தொகையினை அறவீடு செய்வதற்கு என்ஓசீஎஸ்எல் தேவையான நடவடிக்கை எடுக்கும். மேலும், எதிர்காலத்தில் இதைப்போன்ற கொடுப்பனவுகளை வழங்குவதற்காக என்ஓசீஎஸ்எல் முறையான | முற்பணத்தினை அறவீடு செய்வதற்கும், எதிர்காலத்தில் இவ்வாறான கொடுப்பனவுகளை வழங்குவதற்காக முறையான நடைமுறையொன்றினை உருவாக்குவதற்கும் |

| | | | |
|---|---|---|---|
| | தொகைக்கு சமமான ஐ.அ.டொலர் 1,430 பெறுமதியிலான முற்பணக்கொடுப்பனவினை என்ஓசீஎஸ்எல் செலுத்தியுள்ளது. என்ஓசீஎஸ்எல் இந்த பளு தூக்கும் வீரரை பயிற்றுவிப்பாளராக நியமிக்க எதிர்பார்க்கப்பட்ட போதிலும், வெளிநாட்டு கல்வி நிகழ்ச்சித்திட்டத்தினை பூர்த்தி செய்த பின்னர், இவர் இலங்கைக்கு திரும்பவில்லை. மேலும், பெறப்பட்ட முற்பணம் கணக்காய்வு திகதி வரை தீர்வு செய்யப்படவில்லை. | நடைமுறையொன்றினை உருவாக்கும். | நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | சட்டம் மற்றும் இணக்க விடயங்களை/சிக்கல்களை கையாள்வதில் என்ஓசீஎஸ்எல் இற்கு உதவுவதற்காக 2023 பெப்ரவரி 01 முதல் இரண்டு ஆண்டு காலப்பகுதிக்காக வெளியாள் சட்ட ஆலோசகர் ஒருவரை நியமித்து, மீளாய்வாண்டின் போது மொத்தம் ரூபா 935,000 செலுத்தியுள்ளது. இதற்கிடையில், அதே விடயங்கள் மற்றும் சிக்கல்களுக்காக உயர்தொழில் செலவினங்கள் என்று வெளியக சட்ட ஊழியருக்கு ரூபா 6,878,219 தொகையும் செலுத்தப்பட்டிருந்தது. | நாங்கள் மாதந்தோறும் ரூபா 85,000 கொடுப்பனவினை செலுத்தி சட்ட ஆலோசகரை நியமித்ததோம் என்பதை என்ஓசீஎஸ்எல் ஏற்றுக்கொண்டது. சட்ட ஆலோசகர் அல்லது நிறைவேற்றுக் குழுவின் பரிந்துரையின் பிரகாரம் மேலதிக சட்ட ஆலோசனை தேவைப்படும் போது இது ஏற்படுகிறது. | முகாமைத்துவம் அதன் சட்ட அதிகாரிகளிடமிருந்து வினைத்திறனான முறையில் சேவைகளை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | 2022 இல் நடைபெற்ற பொதுநலவாய விளையாட்டுப் போட்டிக்கு 176 நபர்கள் பங்குபற்றுவதற்காக என்ஓசீஎஸ்எல் ஏற்பாடுகளை செய்திருந்தது. அவர்களில், ஆறு நபர்கள் விளையாட்டுக்கள் மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சரின் அங்கீகாரமின்றி பங்குபற்றியிருந்த அதேவேளை, இந்த நிகழ்ச்சிகளில் பங்குபற்றிய பதினான்கு நபர்கள் இந்த விளையாட்டுப் போட்டிகள் நிறைவடைந்த பின்னர் நாட்டிற்கு திரும்பவில்லை. எனினும், 2022 ஆம் ஆண்டின் போது 12 பங்குபற்றியவர்கள் சார்பாக என்ஓசீஎஸ்எல் ரூபா 9,294,968 | 2022 இல் நடைபெற்ற நிறைவேற்று சபை கூட்டத்தில் விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றிய ஆறு உறுப்பினர்கள் அங்கீகரிக்கப்பட்டனர். | குற்றச்சாட்டுக்களுடன் ஈடுபட்டுள்ள அதிகாரிகளுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

தொகையினை
செலவிட்டிருந்தது.

## 3.4 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இந்த அறிக்கை திகதி வரையிலும் கூட என்ஓசீஎஸ்எல் இற்காக ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | என்ஓசீஎஸ்எல் அதன் தற்போதைய மற்றும் எதிர்கால தேவைகளை மதிப்பிடுவதற்கும், அடுத்த ஆண்டிற்குள் புதிய பதவியணியினர் பட்டியலை தயாரிப்பதற்கும் தேவையான நடவடிக்கை எடுக்கும். | செயற்திறன்மிக்க மனிதவள முகாமைத்துவ முறைமையினை பேணுவதற்காக ஆட்சேர்ப்பு திட்டமொன்று தயாரிக்கப்பட்டு அங்கீகாரம் பெறப்பட வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 4.1 செயல்நடவடிக்கை திட்டம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2023 ஆம் ஆண்டுடன் தொடர்புடைய நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதியின் போது அடையக்கூடிய இலக்குகள் மற்றும் நோக்கங்களை உள்ளடக்கிய அங்கீகரிக்கப்பட்டதொரு செயல்நடவடிக்கைத் திட்டம் என்ஓசீஎஸ்எல் இனால் தயாரிக்கப்படவில்லை. | என்ஓசீஎஸ்எல் அதன் வருடாந்த நோக்கங்களை அடைந்து கொள்ள தனியானதொரு கால இலக்குகளை அறிமுகப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கும். | வருடந்தோறும் செயல்நடவடிக்கை திட்டமொன்றினை தயாரிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |